முடிவடைகின்ற காரணத்தால் அதனுடைய நிலைமை என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் ஏதாவது இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு உரிய பதிலைப் பெறுவதற்காகத் தொடர்புடைய அமைச்சருக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் தங்களுக்கு அளிக்கப்படும்.

(ஈ) மத்தியப் பிரதேசத்திலிருந்து பீடி இலைகள் வாராததால் தமிழ் நாட்டில் பீடித் தொழில் பாதிக்கப்பட்டிருத்தல்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடர் இன்றுடன் நிறைவு பெறுகிறது. ஆகவே, அவசர முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விளக்கம் பெற விரும்புகிறேன். தாங்கள் என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பீடித் தொழில் இன்றைக்கு ஒரு மிகப் பெரிய அபாயத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. பீடித் தொழிலுக்கு அடிப்படையாக இருக்கிற பீடி இலைகள் அதிகமாக, சுமார் 80 சதவீதம் மத்தியப் பிரதேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இப்போது மத்தியப் பிரதேசம் ஒரு புதிய கொள்கையை அறிவித்திருக்கிறது. பீடி இலை வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதற்கு சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்கள். இந்த நிலையில் பீடி இலை இல்லாமல் இந்தத் தொழிலை நடத்த முடியாமல் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது? மத்திய பிரதேச அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறதா? மத்திய அரசு இதில் தலையிட்டிருக்கிறதா என்பதைச் சொன்னால் இந்தத் தொழிலில் ஏற்பட்டிருக்கிற பீதி அகற்றப்படும், தொழில் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன விளக்கம் தரப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலுக்கு அத்தியாவசியமான பொருளான இலை மத்தியப் பிரதேசத்திலிருந்து வா

1989 பிப்ரவரி 21] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

வேண்டியிருக்கிறது. மத்தியப் பிரதேசம் விதித்திருக்கிற சில நிபந்தனைகள் காரணமாக அந்த இலையைக் கொண்டுவருவதில் சற்று தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள்—அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய அதிகாரிகள் மத்தியப் பிரதேச அரசுடன் கலந்து ஆலோசிக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. விரைவில் அதற்கான முடிவினை இந்த மன்றத்திலே அறிவிக்கிறேன்.

(முற்பகல் 9-20)

(உ) மெட்டல் பாக்ஸ் தொழிலாளர் பிரச்சினை.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்றம் இன்றைக்கு கடைசி நாளாக நடக்கின்ற காரணத்தினாலே, கடைசி தினத்தன்று இரண்டிக்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்கூட எடுத்துக்கொள்வது வழக்கம். நான் 'மெட்டல் பாக்ஸ்' தொழிலாளர் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துப் பல நாட்கள் ஆகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்து இன்றைய நிலைமை என்ன என்பது பற்றி விளக்கினால் உதவிகரமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இயங்காமல் இருக்கக் கூடிய 'மெட்டல் பாக்ஸ்' நிறுவனத்தைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். மெட்டல் பாக்ஸ் நிறுவனம் நீண்டகாலமாக மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இதை இந்த அரசு பொறுப் பேற்ற உடனேயே அரசினுடைய கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக வந்தவுடன், பி.ஐ.எஃப்.ஆர். டெல்லியிலே நடைபெற்ற விசாரணையின்போது முதல் முயற்சியாக அரசாங்கத்தின் சார்பாக மாநிலத் தொழிலாளர் நல ஆணையாளர் அனுப்பி வைக்கப்பட்டு தொழிலாளர்களுடைய பங்கு பற்றி அங்கு எடுத்துச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்து நாங்கள் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். நிர்வாகத்தோடும் அரசின் சார்பாக பேச்சு வார்த்தை